**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 584 of 2025

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : திருமதி.சண்முகபிரியா

Father's Name : க/பெ.முத்துகுமார்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th **day of March** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் காடுவெட்டிபாளையத்தில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இறந்து போன முத்துகுமார் எனது கணவர். கடந்த 11.09.2024 தேதியன்று இரவு 10.00 – 10.15 மணியளவில் எனது கணவர் வேலையை முடித்து விட்டு, நெம்பர் பிளேட் இல்லாத புது பல்சர் வண்டியில் கணவர் கருமத்தம்பட்டியில் இருந்து அன்னூர் ரோட்டில் வந்து கொண்டிருந்தபோது, வளையபாளையத்தில் இருந்து கிட்டாம்பாளையம் செல்லும் சாலையில் உள்ள மார்க்ஸ் கம்பெனி அருகே வந்தபோது, எதிரே வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக ஸ்டாலின்ராஜ் என்பவர் எனக்கு தகவல் சொன்னார்.

2. நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது, என் கணவருக்கு தலை, வலது கை, வலது காலில் இரத்த காயம் ஏற்பட்டு மயங்கிய நிலையில் இருந்தார். 108 ஆம்புலன்ஸ்

மூலமாக எனது கணவரை கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என் கணவரை அவசர சிகிச்சைபிரிவில் சேர்த்தேன். மறுநாள் மருத்துவமனை வந்த போலீசார், என்னை விசாரித்தபோது என் கணவர் மயக்க நிலையில் இருந்ததால், நான் புகார் வாக்குமூலம் அளித்தேன். மேற்படி புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12 ம் தேதி மாலையில் என் கணவர் இறந்துவிட்டார். 13 ம் தேதி என் கணவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தபோது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது கணவர் விபத்து குறித்து தகவல் எனக்கு எப்பொழுது கிடைக்கப்பெற்றது என்றால் இரவு சுமார் 10.00 முதல் 10.30 மணிக்குள்ளாக கிடைக்கப்பெற்றது. நான் சுமார் 10.30 சம்பவ இடம் சென்றேன். அதன் பின்னிட்டு நான் சம்பவ இடத்திலிருந்து ஆம்புலன்ஸ் மூலமாக எனது கணவரை அழைத்துக் கொண்டு மருத்துவமனை சென்றேன். நான் சம்பவ இடம் சென்ற பொழுது பொதுமக்கள் அதிகளவில் கூட்டமாக இருந்தார்கள் என்றாளல் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்ற பொழுது சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால், ஸ்டாலின்ராஜ், கார்த்திகேயன் மற்றும் பொதுமக்களும் இருந்தார்கள். மேற்சொன்ன ஸ்டாலின் ராஜ் மற்றும் கார்த்திகேயன் எனது ஊரைச் சார்ந்தவர்கள் மற்றும் எனது கணவரின் நண்பர்கள் என்றால் சரிதான்.

2. எனது கணவர் புதியதாக அன்றைய தினம் வாகனம் வாங்கி இருந்தார் என்றால் சரியல்ல, முன்பாகவே வாங்கி இருந்தார். பதிவு மட்டும் செய்யாமல் இருந்தார். நாங்கள் மருத்துவமனைக்கு சென்ற பொழுது இரவு சுமார் 11.00 மணி இருக்கும். சம்பவ இடத்திலேயே ஒரு போலீசார் விசாரித்தார்கள். மறுநாள் மருத்துவமனையில் காலை சுமார் 10.00 மணியளவில் என்னை விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. 13.09.2024 அன்றைய தினம் விசாரித்தார்கள். என்னை போலீசார் விசாரித்த பொழுது சொன்ன விபரத்தை தான் தற்பொழுது நீதிமன்றம் முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். வாக்குமூலத்தை போலீசார் எழுதியதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள். நான் மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன்.

3. வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மருத்துவமனையில் இருந்தபோது செய்தேன். அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவருக்கு ஏற்பட்ட விபத்திற்கு விபத்து காப்பீடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான்

முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் எனது கணவர் சென்று விபத்து ஏற்படவில்லை என்றும் எனது கணவரின் சம்பவ விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.04 17:08:25 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**